199—

சொந்தக் கட்டடம்

***36103—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சியிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சியில் செயல்பட்டுவரும் எஸ்.எம்.டி. 191 பாப்பம்பாடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் நாளொன்றுக்கு 200 லிட்டர் பால் கொள்முதல் செய்து, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றது.

மேலும், இச்சங்கத்தில் மொத்தம் 45 உறுப்பினர்கள் மட்டுமே பால் ஊற்றி வருகின்றார்கள். இச்சங்கம் செயல்பட ஆரம்பித்த நாள் முதல் நாளது தேதி வரை இச்சங்கத்தில் கட்டட நிதியாக ரூ.20,655.91 பைசா மட்டுமே உள்ளதாலும், சொந்தமான நிலம் ஏதும் இல்லாததாலும், சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய துணை வினாவை எழுப்புகிறேன்.*

2014 ஜூலை 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சியில் செயல்பட்டுவரும் எஸ்.எம்.டி. 191 பாப்பம்பாடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம், தற்போது கொண்டகாரனூர் என்ற இடத்தில், தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு பால் உற்பத்தியாளர்கள் பால் கொண்டு வருவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. பாப்பம்பாடி பஸ் நிலையம் அருகில் 4 தனியார் பால் சேகரிக்கும் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தினந்தோறும் சுமார் 800 லிட்டர் பால் கொள்முதல் செய்கின்றன. ஆகவே, கொண்டகாரனூரில் செயல்பட்டுவரும் பால் கூட்டுறவுச் சங்கத்தை பாப்பம்பாடி பஸ் நிலையம் அருகே மாற்றம் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம், தனது ஆண்டு வருவாயில் 10 சதவிகிதத் தொகையினைக் கட்டட நிதியாக ஒதுக்கிக்கொள்ள இயலும். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட 20–12–1980 முதல் நாளது தேதிவரை, இச்சங்கக் கட்டட நிதியாக தற்போது ரூ.28,211.91 பைசா மட்டுமே உள்ளது. மேலும் இச்சங்கத்திற்குச் சொந்தமாக நிலம் ஏதும் இல்லை. எனவே, இச்சங்கத்தில் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், சங்கத்தின் சொந்த நிதியிலிருந்து கட்டடம் கட்ட தற்போது வாய்ப்பில்லை. இது போன்ற பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் கட்டடம் கட்ட நிதி உதவி செய்ய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தில் வழிவகை இல்லை. மேலும் இச்சங்கத்திற்குக் கட்டடம் கட்ட சொந்த நிலம் கிடைக்கும்பட்சத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டால், சங்கத்திற்குக் கட்டடம் கட்ட இயலும். மேலும் சங்கரி தொகுதியில் தேசிய பால்பெருக்குத் திட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையின்படி நாளொன்றுக்கு 5,000 லிட்டர் திறன்கொண்ட தொகுப்பு பால்*

குளிர்விப்பான்கள், ரெட்டிப்பாளையம், வளையக்காரனூர், கள்ளிப்பாளையம், வைகுந்தம், வடுகப்பட்டி, ஓலக்கசின்னானூர், வருதம்பட்டி ஆகிய 6 இடங்களில் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் இல்லை என்பதனை எடுத்துக் கூறினார்கள். பாப்பம்பாடி பஸ் நிலையம் அருகில் அரசுக்குச் சொந்தமான காலி இடங்கள் உள்ளன. அந்த இடத்தில் எஸ்.எம்.டி.191 பாப்பம்பாடி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையுடன் பரிசீலித்து கட்டடம் கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அரசு நிலம் அந்தப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்கப்படுகிறதா என்பது உறுதி செய்யப்பட்டு, அப்படி அந்தப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டால் அந்த இடத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துதான் கட்டடம் கட்ட முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார், மாண்புமிகு*